<u>சுருக்கம்</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கல்வி – விடுதிகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பள்ளி / கல்லூரி விடுதி மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத் தொகையை உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.


---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந 1)த்துறை**

**அரசாணை (நிலை) எண். 110** **நாள். 6.11.2008.**

**படிக்கவும் :**

1. அரசாணை (நிலை) எண். 14, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 11.5.2004.
2. அரசாணை (நிலை) எண். 45, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபானமையினர் நலத்துறை, நாள். 30/5/2007.
3. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண். பி2/1315/08, நாள். 7.8.2008.

------

**<u>ஆணை:</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையனர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் கல்லூரி / பள்ளி விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் உணவுக்கட்டணம் நபர் ஒருவருக்கு, ஒரு மாதத்திற்கு முறையே ரூ.300/–லிருந்து ரூ. 400/–ஆகவும் மற்றும் ரூ.400/–லிருந்து ரூ.500/–ஆகவும் 1.6.2007 முதல் உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேற்படி கட்டண விகிதங்கள் தற்போதுள்ள விலைவாசி ஏற்றத்தின்படியும் மாணவ/மாணவியருக்கு வழங்கப்பட வேண்டிய உணவு வகைகளையும் கருத்தில் கொண்டு விடுதி மாணவர்களுக்கு எற்கனவே வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணம், பள்ளி விடுதிக்கு ரூ.400/–லிருந்து ரூ.450/–ஆகவும், கல்லூரி விடுதிக்கு ரூ.500/–லிருந்து ரூ.550/–ஆகவும் உயர்த்த 2008 – 2009ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பின்படி, உணவு கட்டணத்தை உயர்த்தி வழங்கவும், அரசாணை (நிலை) எண். 14, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 11.5.2004–யின்படி தற்போது நடைமுறையில் உள்ள கல்லூரி மற்றும் பள்ளி விடுதி மாணவ / மாணவியருக்கான நிர்ணயிக்கப்பட்ட நாள் வாரியான உணவு வகைகளுக்குத் தேவைப்படும் உணவுப் பொருட்களின் அளவு விவரங்களும் மற்றும் இவ்வுணவு வகைகள் தயாரிக்கத் தேவைப்படும் உணவுப்

பொருட்களின் பட்டியலுக்கு சில மாற்றங்கள் செய்யவும் பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அரசின் ஆணையினைக் கோரியுள்ளார்.

3. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து, இத்துறையின் பள்ளி விடுதி மாணவ/மாணவியருக்கு உணவுக் கட்டணத்தை நபர் ஒருவருக்கு, மாதமொன்றுக்கு ரூ.400/–லிருந்து ரூ.450/–ஆகவும், கல்லூரி விடுதி மாணவ / மாணவியருக்கு உணவுக் கட்டணத்தை நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.500/–லிருந்து ரூ.550/–ஆகவும் உயர்த்தி வழங்க அனுமதியளித்தும், பள்ளி மற்றும் கல்லூரி விடுதி மாணவ மாணவியருக்கான உணவு வகைகளுக்கு தேவைப்படும் திருத்தப்பட்ட உணவு பொருட்களின் பட்டியலுக்கு அனுமதியளித்தும் (இணைப்பு I மற்றும் இணைப்பு II –ல் உள்ளவாறு) ஆணையிடுகிறது. இக்கட்டண உயர்வினை 1.11.2008 முதல் நடைமுறைப்படுத்தவும் அரசு ஆணையிடுகிறது.

4. இதற்கான கூடுதல் செலவினம் மாதமொன்றுக்கு தொடரும் செலவினமாக பள்ளி மாணவர்களுக்கு ரூ. 29.89 இலட்சமும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 3.95 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 33.84 இலட்சம் (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்படுகிறது. இக்கூடுதல் செலவினத்தினை எதிர்நோக்கி, தேவையான நிதியொதுக்கம் 2008–09–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

1. <u>பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் (ரூ.1843000/–)</u>

“2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவிரில்லங்கள் – 67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09 – ஏனையவை”.
(து.தொ.கு.எண். 2255 03 277 JA 6799)

2. <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் (ரூ.9,79,300/–)</u>

“2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KA - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவிரில்லங்கள் – 67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09 – ஏனையவை”.
(து.தொ.கு.எண். 2255 03 277 KA 6799)

3. <u>சீர்மரபினர் விடுதிகள் ( ரூ.561800/–)</u>

“2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது 101 – சீர்மரபினர் – ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JH - சீர்மரபினர் மாணவிரில்லங்கள் – 67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09 – ஏனையவை’’.
(து.தொ.கு.எண்.2255 80 101 JH 6793)

6. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண். 163/SS(AP)/2008, நாள் 23.10.2008 மற்றும் அலுவல் சார்பற்ற எண். 68962/BC,MBC/2008. நாள். 6.11.2008–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

**( ஆளுநரின் ஆணைப்படி )**

**ந. வாசுதேவன்,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்:
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை – 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்,
சென்னை – 5.
மாநில கணக்காயர், சென்னை – 18.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18 (பெயரில்)
மாநலக் கணக்காயர் (துணிக்கை 1) சென்னை – 18.
மாநலக் கணக்காயர் (துணிக்கை 1) சென்னை – 18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல் :
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
நிதித் (சந/ வ.செ.பொது1/ வ.செ. பொது2) துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை, சென்னை –9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை– 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**

## இணைப்பு –1

### விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒரு மாணவன்/மாணவிக்கு, ஒரு மாதத்திற்கு வரையறுக்கப்படும் உணவுப் பொருட்களின் விவரம்

### 1. கல்லூரி விடுதிகள்

| வ.எண். | உணவுப் பொருளின் விவரம் | பொருளின் அளவு | ஒரு கிலோவிற்கான விலை (ரூ) | செலவினம் |
|---|---|---|---|---|
| 1. | அரிசி | 18 கிலோ | 3.00 | 54.00 |
| 2. | கடலைபருப்பு | 750 கிராம் | 40.00 | 30.00 |
| 3. | துவரம்பருப்பு | 400 கிராம் | 49.00 | 19.60 |
| 4. | எண்ணெய் | 450 கிராம் | 78.00 | 35.10 |
| 5. | புளி | 300 கிராம் | 36.00 | 10.80 |
| 6. | மிளகாய் | 200 கிராம் | 75.00 | 15.00 |
| 7. | உளுத்தம்பருப்பு | 300 கிராம் | 48.00 | 14.40 |
| 8. | உப்பு | 600 கிராம் | 3.00 | 1.80 |
| 9. | மஞ்சள்பொடி | 15 கிராம் | 70.00 | 1.05 |
| 10. | தனியா | 40 கிராம் | 91.00 | 3.65 |
| 11. | கறிமாசலா | 5 கிராம் | -- | 10.00 |
| 12. | ஜீரகம் | 15 கிராம் | 155.00 | 2.35 |
| 13. | கடுகு | 15 கிராம் | 50.00 | 0.75 |
| 14. | பூண்டு | 20 கிராம் | 50.00 | 1.00 |
| 15. | காய்கறி, கருவேப்பிலை, பச்சைமிளகாய், மல்லிக்கீரை மற்றும் இஞ்சி | 6 கிலோ | 15.00 | 90.00 |
| 16. | தயிர்/பால் | 1.5 லிட்டர் | 20.00 | 30.00 |
| 17. | விறகு/எரிவாயு | 3.5 கிலோ கிராம் | 350.00 (14.2 கி.கி) | 86.25 |
| 18. | வறுத்தபருப்பு | 350 கிராம் | 49.00 | 17.15 |
| 19. | பாசிப்பருப்பு | 400 கிராம் | 42.00 | 16.80 |
| 20. | மிளகு | 15 கிராம் | 200.00 | 3.00 |
| 21. | ஆட்டிறைச்சி | 160 கிராம் | 200.00 | 32.00 |
| 22. | கோழி இறைச்சி | 240 கிராம் | 75.00 | 18.00 |
| 23. | முட்டை | 12 எண்ணிக்கை (1.6.2007 முதல்) | 2.00 | 24.00 |
| 24. | வெங்காயம் | 500 கிராம் | 10.00 | 5.00 |
| 25. | எலுமிச்சை | 5 எண்ணிக்கை | 1.00 | 5.00 |
| 26. | தேங்காய் | 1 எண்ணிக்கை | 5.00 | 5.00 |
| 28. | பெருங்காயம் | 10 கிராம் | 37.00 | 0.40 |
| 29. | ரவா | 300 கிராம் | 26.80 | 8.05 |
| 30. | டால்டா | 30 கிராம் | 55.00 | 1.10 |
| 31. | வெந்தயம் | 20 கிராம் | 46.00 | 0.90 |
| 32. | சோம்பு | 20 கிராம் | 69.00 | 1.35 |
| 33. | ஆப்பசோடா | 10 கிராம் | 27.00 | 0.25 |
| 34. | பட்டாணி | 50 கிராம் | 25.00 | 1.25 |
| 35. | தக்காளி | 500 கிராம் | 10.00 | 5.00 |
| மொத்தம் | | | | 550.00 |

## இணைப்பு –2

### விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒரு மாணவன்/மாணவிக்கு, ஒரு மாதத்திற்கு வரையறுக்கப்படும் உணவுப் பொருட்களின் விவரம்

### 2. பள்ளி விடுதிகள்

| வ.எண். | உணவுப் பொருளின் விவரம் | பொருளின் அளவு | ஒரு கிலோவிற்கான விலை (ரூ) | செலவினம் |
|---|---|---|---|---|
| 1. | அரிசி | 15 கிலோ | 3.00 | 45.00 |
| 2. | கடலைபருப்பு | 500 கிராம் | 40.00 | 20.00 |
| 3. | எண்ணெய் | 300 கிராம் | 78.00 | 23.40 |
| 4. | காய்கறி, கருவேப்பிலை, பச்சைமிளகாய், மல்லிக்கீரை மற்றும் இஞ்சி | 5 கிலோ | 15.00 | 75.00 |
| 5. | பால்/தயிர் | 1.5 லிட்டர் | 20.00 | 30.00 |
| 6. | விறகு/எரிவாயு (50/10 கி.கி.) | 3 கி.கி. | 350.00 (14.2 கி.கி) | 73.95 |
| 7. | புளி | 250 கிராம் | 36.00 | 9.00 |
| 8. | வறுத்தபருப்பு | 200 கிராம் | 49.00 | 9.80 |
| 9. | உப்பு | 500 கிராம் | 3.00 | 1.50 |
| 10. | துவரம்பருப்பு | 200 கிராம் | 49.00 | 9.80 |
| 11. | பச்சைபயறு | 300 கிராம் | 42.00 | 12.60 |
| 12. | உளுத்தம்பருப்பு | 250 கிராம் | 18.00 | 12.00 |
| 13. | கறிமசாலா | ரூ.5.00 | -- | 5.00 |
| 14. | முட்டை | 12 எண்ணிக்கை (1.6.2007 முதல்) | 2.00 | 24.00 |
| 15. | ஆட்டிறைச்சி | 160 கிராம் | 200.00 | 32.00 |
| 16. | கோழி இறைச்சி | 200 கிராம் | 75.00 | 15.00 |
| 17. | எலுமிச்சை | 4 எண்ணிக்கை | 1.00 | 4.00 |
| 18. | தேங்காய் | 1 எண்ணிக்கை | 5.00 | 5.00 |
| 19. | ரவா | 250 கிராம் | 26.80 | 6.10 |
| 20. | மிளகாய் | 150 கிராம் | 75.00 | 11.25 |
| 21. | தனியா | 30 கிராம் | 91.00 | 2.75 |
| 22. | மஞ்சள்பொடி | 15 கிராம் | 70.00 | 1.05 |
| 23. | மிளகு | 15 கிராம் | 200.00 | 3.00 |
| 24. | ஜீரகம் | 15 கிராம் | 155.00 | 2.30 |
| 25. | பூண்டு | 15 கிராம் | 50.00 | 0.75 |
| 26. | டால்டா | 30 கிராம் | 55.00 | 1.65 |
| 27. | வெங்காயம் | 500 கிராம் | 10.00 | 5.00 |
| 28. | பட்டாணி | 50 கிராம் | 25.00 | 1.25 |
| 29. | கடுகு | 15 கிராம் | 50.00 | 0.75 |
| 30. | தக்காளி | 400 கிராம் | 10.00 | 4.00 |
| | மொத்தம் | | | 446.90 (அ) 450.00 |